# உடன்போக்குத்துறைப்பாடல்களும் சமூகம்சார் மதிப்பு நிலைக்கூறுகளும்

**முனைவர் க.மைதிலி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம், சேலம்

**முன்னுரை**

தமிழ்மொழியின் முதன்மை இலக்கியமான சங்க இலக்கியம் சங்கச் சமுதாய அரசியல், பொருளாதாரம், வரலாறு, பண்பாடு ஆகியவற்றின் பதிவாக அமைந்த கருவூலம் ஆகும். இவ்வியல்புடைய சங்க இலக்கியம் திணைப்பகுப்பு வாரியாகத் தொகையாக்கம் செய்யப்பெற்றுள்ளது. அவை குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல், என அன்பின் ஐந்திணையாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. இங்ஙனம் ஐந்திணையானது முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் எனும் திணைக்கூறுகளின் அடிப்படையில் களவொழுக்கம், கற்பொழுக்கம் எனும் நிலையிலான அகவயவியலை விளக்குகின்றன. வாழ்வியல் நிகழ்ச்சிகளை விளக்கும் சங்க அகப்பாடல்கள், சிறுசிறு நிகழ்ச்சிகளை விளக்கும் தனிப்பாடல்களாகும். அகப்பொருள் பற்றி வரும் அப்பாடல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு துறையில் அமைந்திருக்கும். அவ்வகையில் பாலைத்திணையில் உடன்போக்குத்துறையில் அமைந்துள்ள பாடல்களின் வழியாக ஆண் பெண் உறவுகளையும் காதல் தொடர்புகளையும் இவற்றை ஒட்டிய மனநிலைகளையும் முன்னிலைப்படுத்தும் பாங்கை அறிதல் இன்றியமையாதது.

சங்க அகப்பாடல்கள் காட்டும் தலைவன், தலைவி முன்பின் அறிமுகமில்லாதோராகவே உள்ளனர். புதிய சமூக வளர்ச்சியில் காதல் எனும் செயல்பாடு ஏற்றுக்கொள்ளப்படாததாகவே இருந்தது. இதனால் எதிர்ப்புகளும் முரண்பாடுகளும் ஏற்பட்டன. ஆண், பெண் சார்ந்த குடும்ப உறவுகுள் காதல் ஏற்றுக்கொள்ளாததால், காதலர் தொடர்பில்லாத புதிய இடங்களுக்கு உடன்போக்கு மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனடிப்படையில் உடன்போக்கு எனும் செயல்நிலை பண்டைத் தமிழரிடையே பெற்றிருந்த சமூக மதிப்பீட்டை ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**களவுநிலையும் சங்ககாலச் சமூகச்சூழல்களும்**

பண்டைய காலத்தில் இனக்குழுச் சமூகம் வேட்டையாடியும் இயற்கையில் கிடைத்த காய்கனிகளைத் தேடியும் உணவுத்திரட்டும் வாழ்முறையில் கூட்டு வாழ்க்கை முறைகளைக் கொண்டிருந்தனர். இதற்கு அடுத்த நிலையில் உணவு உற்பத்திக்கு முன்னேறி ஆற்றங்கரை வேளாண்மையில் முன்னேற்றம் கொண்டு பண்பாட்டு வளர்ச்சியைச் சமூகம் அடைந்தது என்பது மானுடவியலாளர் மற்றும் சமூகவியலாளர் கூற்றாகும். தொடக்ககால இனக்குழு வாழ்வின் கூட்டு வாழ்க்கை முறையிலேயே மனிதன் இயற்கையினூடாக இயல்புடன் பல்வேறான அறிதல்களையும் புரிதல்களையும் பெற்றுக்கொண்டான். இயற்கைச் சீற்றங்களிலிருந்தும் விலங்குகளிடமிருந்தும் தன்னைக்காத்தும், வில், அம்பு போன்ற கருவிகளைக் கொண்டு விலங்குகளை வேட்டையாடவும் பழங்கால மனிதன் பழகிக்கொண்டான். இத்தகைய வளர்ச்சி மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் சங்ககாலச் சமுதாயம் உள்வாங்கி கொண்டநிலைகளைச் சங்கப்பாடல்களில் ஆழமாகவும் இயல்பாகவும் பதிவாகி உள்ளன. இனக்குழுச்சமூகத்தில் இருந்து வேளாண்மை நிலைக்கு உயர்ந்த சமூகநிலை குறித்து “தொடக்க நிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட குருதி உறவுள்ள இனக்குழு – குடிகளுக்கு இடையே தான் ஆண்-பெண் உறவுகள் இருந்தன பிற வகைப்பட்ட உடல் உறவுக்கு அன்றைய கட்டத்தில் வாய்ப்புகளும் சூழல்களும் இருக்கவில்லை. காடுகளை அழித்து அந்நிலங்களில் பயிரிட்டு வாழ்ந்த சங்கச் சமூகத்தினர் அடுத்தடுத்த பருவங்களுக்கு வேறு நிலங்களை நாடிச்செல்ல வேண்டியிருந்தது. நிலத்தினைப் பயன்படுத்தும் நுட்பம் அறிந்தபின் நீர் வாய்ப்புள்ள இடங்களைத் தேடிச் செல்லும் நிலை உண்டாயிற்று வேளாண்மையின் நுட்பத்தை அறிந்தபின் இனக்குழுச் சமூகத்துக்குள்ளே வேண்டியவாறான வேலைப்பகுப்பினை உருவாகின”[1] என மே.து.இராசுகுமார் எடுத்துரைக்கின்றார்.

வரலாற்றுக்கு முற்பட்ட நிலையில் தமிழர் சமூகத்தில் உறவுமுறைகளும் மணமுறைகளும் பாகுபடுத்தப்படவில்லை நாளடைவில் ஏற்பட்ட வேளாண்மை வளர்ச்சி வேலைப்பிரிவினையும் சமூகத்தர நிலைகளையும் தோற்றுவிக்கப்பட்டன. ஆற்றங்கரை பாசனமும் இரும்பின் பயன்பாடும் சமூகத்தில் செல்வத்தைப் பெருக்கியது. இதனால் சமூக நிறுவனங்களுக்குள் மாற்றம் நிகழ்ந்தது. முக்கியமாக மனித உறவுகளுக்குள்ளே பெரும் வேறுபாடு தோன்றியது. “இனக்குழு-குடிகளின் அன்றாடச் செயல்பாடுகளில் மேலும் பெருத்த மாறுதல்களுக்கு வழியேற்படுத்தின. நீர்வளம் நாடிப்புதிய இடங்களுக்கு நகர்ந்ததால் ஆங்காங்கே இருந்தவேறு இனக்குழு-குடிகளுடன் தொடர்பும் உறவும் ஏற்படக்கூடி இன்றியமையாமை நிகழ்ந்தது வேலைப்பிரிவினையாலும் வாழ்முறை மாற்றங்களாலும் இனக்குழு-குடிகள் தங்களது வழமைகள் அனைத்தையும் முன் பிருந்தவாறே முழுமையாகத் தொடர முடியவில்லை. இனக்குழு-குடிப்பண்புகள் பல நி"டித்திருந்தாலும் அவற்றில் மாற்றங்களும் சிதைவுகளும் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. புதிய

உற்பத்தி வேண்டல்களுக்கு ஏற்றவாறான ஆண்-பெண் உறவுகள் இயல்பாகவே நடைமுறைப்பட்டன"[2]. இங்ஙனம் ஏற்படும் வாழ்வியல் மாற்றங்கள் பெண்களுக்கான சமூகமதிப்பில் வேறுபாடு இயல்பாக நிகழ்ந்ததைச் சங்க இலக்கியங்களில் பதிவாகி உள்ளன. இதனை கு.ப.அழகம்மை "இனக்குழு வாழ்வமைப்பின் முதிர்வையும் குடும்பமெனும் நிறுவன வளர்ச்சியையும் சங்க இலக்கியங்களில் காண இயலுகிறது. தாய்வழிச் சமுதாயத்தின் எச்சமும் தந்தைவழிச் சமுதாயத்தின் நிலைப்படுதலும் செய்திகளில் பதிவாகியுள்ளன. இச்சூழலுக்கேற்பவே பெண்களின் வாழ்க்கைப் பாங்கும் அமைந்துள்ளது"[3] என குறிப்பிடுகிறார்.

பண்டைத்தமிழகத்தில் களவுநிலை எனும் செயற் பாடு பெண்களின் சுதந்தர செயல்பாட்டைக் காட்டுவனவாக உள்ளது. இத்தன்மையுடைய களவு, கவிதை மரபின்படி மலைப்பகுதியிலேயே மிகுதியாகத் தோன்றுவதாகப் பாடல்கள் இயற்றப்பட்டன. ஏனெனில் குறிஞ்சி நிலத்தின் நிலஇயல், வாழ்க்கையியல்பு, தொழில், மக்களின் நடைமுறை வாழ்வியல் ஆகியன களவுக்காதலுக்குரிய சூழலை அளித்திருக்கின்றன. "பண்டை நாட்களில் மலை வாழ்நர்க்குத் தினையே முதன்மையான உணவாகும். முலை உச்சிகளில் நன்கு உழப்பட்ட நிலங்களில் அவர்கள் தினையைப்பயிரிட்டு வளர்ப்பது வழக்கமாகும். தினைக்கதிர்கள் அறுவடைக்கு முற்றியபோது பறவைகள் வந்து அக்கதிர்களை உண்ணும்.... மலை வாழ்நர் தினைப்புனங்களைப் பாதுகாக்கத் தங்களின் பருவமகளிரை அனுப்புதல் வழக்கமாகும். மணமாகாத இவ்விளம் பெண்கள், சிற்றூரின் ஓசையிலிருந்தும் ஆரவாரத்திலிருந்தும் ஒதுங்கியுள்ள தினைப்புனங்களைக் காவல் செய்வர். மலைக்கண் வாழும் இளைஞர்களின் தலைமையான தொழில் வேட்டையாடுதலாகும் அவர்கள் மலைப்பகுதியைச் சுற்றிவருவர் அழிவு ஏற்படுத்தவரும் முரட்டு யானைகளை மக்களின் பொருட்டாக வேட்டையாடுவர். மணமாகாமகளிர் தினைப்புனங்களைக் காவல் காக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டமையாலும், இளைஞர்கள் வேட்டைத்தொழிலை மேற் கொண்டமையாலும் மலைப்பகுதி களவுக்காதலர்களின் சந்திக்கும் இயற்கை நிலமாக ஆயிற்று"[4] என்ற தமிழண்ணல் கூற்று விளக்கியுரைக்கின்றது. விலங்குகளை வேட்டையாடிக் கெண்டிருந்த மலைநாடனும் தினைப்புனத்தில் காவல் தொழிலை மேற்கொண்டிருந்த தலைவியும் சந்திக்கும் வாய்ப்புப்பெற்றுக் காதல் கொண்டனர். அதேபோல் ஆடு, மாடு மேய்க்கும் முல்லை நிலத்தினரும் வெவ்வேறு குடிகளைச் சார்ந்த ஆணும் பெண்ணும் காதல்கொண்டனர் என்பதைச் சங்க அகப்பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. இவ்வாறு சங்கச் சமூகத்தில் களவுத் தோன்றுவதற்கு வேலைப்பிரிவினைகள் சூழலை உருவாக்கியது எனத் தெளியலாம்.

### சங்ககால மகளிரும் காதலும்

சங்கச்சமூகத்தில் நானிலப்பகுதிகளும் பொருளாதார நிலையில் இரு வகைப்படுகின்றன. மலையின் இயற்கை வளத்தையும் புன்செய் வேளாண்மையையும் அடிப்படையாகக் கொண்டிருந்த குறிஞ்சியும் கால்நடை வளர்ப்புடன் புன்செய் வேளாண்மையும் உடன் கொண்டிருந்த முல்லையும் பொருளாதாரப் பின்னடைவு உடைய சமுதாயங்களாக இருந்துள்ளன.இங்கு மேற்கொள்ளப்படும் புன்செய் வேளாண்மை, தினைப்புனக்காவல் எனும் செயல்நிலைக்கு அடிப்படையாக இருந்துள்ளது. ஆகையால் குறிஞ்சித்திணைப் பாடல்களில் தினை விதைப்பதும் அதைக் காப்பதும் அறுவடை, செய்வதும் முக்கியச் செயற்பாடுகளாக அமைந்திருந்தன. இதனை,

**இருங்கல் அடுக்கத்து என்ஜயர் உழுது**
**கருங்கால் செந்தினை கயும் உண்டன** (நற்122,1-2)

**தந்தை வித்திய மென்தினை பைபயச்**
**சிறுகிளி கதல் பறக்குயா வணதோ**
**குளிர்படு கையள் கொடீச்சி செல்க'என,**
**நல்லஇனிய கூறி' மெல்லக்**
**கொயல் தொடங்கினரே கானவர்; கொடுங்குரல்**
**சூற்பொறைஇறுத்த கோல்தலைஇருவி**
**விழவுஒழி வியன்களம் கடுப்பத் தெறுவரப்**
**பைதல் ஒருநிலைகாண வைகல்**
**யாங்கு வருவது கொல்லோ தீம்சொல்**
**செறிதோட்டு எல்வளைக் குறுமகள்**
**சிறுபுனத்து அல்கிய பெரும்புற நிலையே** (நற்.306:1-11)

எனும் பாடலடிகளில் தினைவிதைப்பது ஆடவர் தம் செயலாக இருக்க அதைக் காப்பது பெண்டிர் தம் செயலாக இருந்ததை உணரலாம். குறிஞ்சி நிலத்தில் தினைப்புனக்காவலுக்கு இளம்பெண்டிர் சென்றதை,

**வளைவாய்ச் சிறுகிளி விளைதினைக் கடிஇயர்**
**செல்க' என்றாளே' அன்னை"** (குறுந்.141:1-2)

நற்றிணை 147, 389 ஆகிய பாடலடிகள் உணர்த்துகின்றன.

**நன்பொன்இமைக்கும் நாடனொடு**
**அன்புறு காமம் அமைகநம் தொடர்பே** (நற்றி.389:1-11)

**யாங்குஆகுவமோ 'அணிநுதற் குறுமகள்!**
**தேம்படு சாரல் சிறுதினைப் பெருங்குரல்**
**செவ்வாய்ப் பைங்கிளி கவர நீமற்று**
**எவ்வாய்ச் சென்றனை அவண் எனக்கூறி**
**அன்னை ஆனாள் கழற** (நற்றி:147,1-7)

ஆகிய பாடலடிகள் உணர்த்துகின்றன. இளம்பெண்களைத் தினைப்புனக்காவலுக்குத் தாய் அனுப்பியதையும், அவர்கள் தாயால் கண்காணிக்கபட்டதையும் சங்கப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. "தினைக்காவலுக்குச் செல்லும் பெண்டிர் காதல் வயப்பட்டதையும், காதல் வயப்பட்ட பெண்டிர் பிறிதொரு நிலையில் காதலனைச் சந்திப்பதற்கு உரியகளமாகத் தினைப்புனத்தைப் பயன்படுத்திக் கொண்டதையும் சங்கப்பாடல்களில் காணலாம்"[5] என பெ.மாதையன் கூறும் கருத்துக் குறிப்பிடத்தக்கது. சங்ககால இளம்பெண்டிரின் இத்தகைய செயல்பாடு பெண்களின் சுதந்திரமான செயல்நிலையைக் காட்டுகின்றது. இவைப்

பெண்களுக்கான களவுக்காதல் உரிமையை வெளிப்படுத்தும் பாங்கில் அமைந்துள்ளது.

**களவெழுக்கம் அறியும் சூழலும் தாயும்**

தலைவியின் களவொழுக்கம் கற்பொழுக்கமாக மாறத் துணைபுரிவது அலர். தலைவியின் காதல் ஒழுக்கம் பற்றி ஊர்மகளிர் வாய்க்குள் பேசிக்கொள்வது அம்பல் என்றும் வெளிப்படையாகப் பேசுவது அலர் எனவும்அகஇலக்கியம் கூறுகிறது. அம்பல் அலர் என்பது "முகிழ்முகிழ்த்தலும் பலர் அறியச் சொல் நிகழ்த்துதலும்"[6] எனப்பொருளுரைப்பர் நச்சினார்க்கினியர். இந்த அம்பல் அலர் உள்ளுர் பெண்டீராலேயே நிகழும். தலைவியின் காதல் ஊராரின் அலரால் அன்னை அறிவதை,

**தண்பெரும் பரப்பின் ஒண்ப தம்நோக்கி.**
**ஆங்கண் அரில்வலை யுணக்கும் துறைவனோடு**
**அலரே, அன்னை அறியின்இவநுறை வாழ்க்கை**
**அரியவாகும் நமக்கெனக் கூறிற்**
**கொண்டும் செல்வர் கொல் தோழி (நற்றி.4:3-8)**

எனும் பாடலடியில் அன்னை அலரார் காதலை அறிந்து கொண்டாள் ஆகையால் இவ்வூரில் தான்வாழ்வது அரிதாகும் என வருந்துகிறாள். பருவம் எய்திய தலைவியைத்தாய் இல்லில் அடைத்துவைத்துப் பாதுகாத்தாள் என்பதனை,

**முலைமுகம் செய்தன முள்எயிறுஇலங்கின**
**தலைமுடி சான்ற தண்தழை உடையை**
**அலமரல் ஆயமோடு யாங்கணும் படாஅல்**
**மூப்புடை முதுபதி தாக்கு அணங்கு உடைய**
**காப்பும் பூண்டிசின் கடையும் போகலை**
**பேதை அல்லை- மேதைஅம் குறுமகள்" (அகநா.7:1-6)**

எனும் பாடலடிகளின் வழித்தெளியலாம்.

**.... துறைவனொடு**
**அலரே அன்னை அறியின், இவண் உறைவாழ்க்கை**
**அரிய ஆகும் நமக்கு எனக்கூறின் (நற்.4:4-6)**
**............ அல்லாந்து**
**என்முகம் நோக்கியோளே, அன்னாய்**
**யாங்கு உணர்ந்து உய்குவள் கொல்(நற்.55:8-10)**
**................. சிறிய**
**பசலைபாய்தரு நுதலும், நோக்கி**
**வறிதுஉகு நெஞ்சினன், பிறிது ஒன்று சுட்டி,**
**வெய்ய உயிர்த்தனள் யாயே-**
**ஐய அஞ்சினம்..... (நற்.368:6-10)**

தலைவியைக் கொல்பவள் போல் நோக்கியும், இற்செறிக்க எண்ணியும் செயல்படுவளானாள் என்பதை மேற்கூறிய பாடலடிகள் உணர்த்துகின்றன.

மேலும் காதலில் ஈடுபட்ட தலைவியை அன்னைக் கோலால் அடித்ததை,

**மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்றச்**
**சிறுகோல் வலந்தன ளன்னை யலைப்ப**
**அலந்தனென் ........... (நற்.149:3-5)**
**பனிக்கழி துழவும் பானாள், தனித்துழ்**
**தேர்வந்து பெயர்ந்தது....**
**ஓரும் அலைக்கும் அன்னை பிறரும்**
**பின்னுவிடு கதுப்பின் மின்னிழை மகளிர்**
**இளையரும் மடவரு முளரே**
**அலையாத் தாயரொடு நற்பா லோரே (குறுந்.246:3-8)**

ஆகிய பாடலடிகள் மூலம் அறியலாம்.

**அறத்தொடு நிற்றலுக்கான சூழல்**

தலைவன் தலைவி ஆகியோரிடையே பலரறியாமல் தோன்றிய காதலை உரிய காலத்தில் அவர்கள் தம் திருமணத்தால் அனைவரும் அறியும் கற்பொழுக்கமாக அமைதல் வேண்டும் என்பது, பண்டைத் தமிழர் தம் பண்பாடாகும். காதல், பெற்றோரால் இயல்பாக அறியப்படாத நிலையிலும் அது மரபுக்கு மாறானது என அறியப்பட்ட நிலையிலும் அறத்தொடுநிற்றல் முக்கியச் செயற்பாடாக உள்ளது. எனவே ஏற்பாட்டுத் திருமணத்தில் விருப்பம் உடையவரான பெற்றோருக்குத் தலைவன் தலைவியினால் மேற்கொள்ளப்பட்ட காதலை அறிவிக்க மேற்கொள்ளப்படும் செயல்நிலையே அறத்தொடுநிற்றல் எனும் செயல்பாடாகும்.

இம்முயற்சியினை மேற்கொள்வதில் தலைவி தோழிக்கும் தோழி செவிலிக்கும் செவிலி நற்றாய்க்கும் என அனைத்து நிலையிலும் பெண்டீரின் பங்கு முக்கியமானதாக இடம்பெறுகிறது. காதலைக் கற்பாக்கும் செயற்பாட்டு நிலையில் பெண்களின் பங்குக் குறித்து பெ.மாதையன், "காதல் என்பது ஒருதார மணமுறையின் மறுதலையாய்ப் பெண்ணுக்கான சுதந்திரமான செயற்பாடாக அமைந்த ஒன்றாகவே இருப்பதால் அந்தக்காதலைக்காத்து அதைத் திருமணத்தில் முடிக்கும் பொறுப்பும் பெண்டிர்க்கு உரியதாகவே இருந்துள்ளது"[7] எனக் குறிப்பிடுகின்றார். களவுக்காதலின் அனைத்துச் செயல் நிலையிலும் பெண்கள் முனைப்புடன் செயற்பட்டப்பாங்கைச் சங்கப்பாடல்கள் காட்டுகின்றன.

தலைவி தலைவனைச் சந்திப்பதற்கு உரிய இட நிர்ணயம் பற்றிய பகற்குறி இரவுக்குறிகளை அறிவிப்பவர்கள் பெண்களாகவே உள்ளனர். இற்செறிப்புக்கு ஆளானவர்கள், தினைப்புனக்காவலைக் காதலுக்குரிய களமாகக் கொண்டவர்கள், திருமணம் செய்து கொள்ளத் தலைவனை வற்புறுத்துவார்கள், காதலைத் தாயர்க்குத் தெரிவிப்பவர்கள், வேற்றுவரைவு நேர்கையில் அதைத் தவிர்க்க முயலுபவர்கள், உடன்போக்கைத் தீர்மானித்து அதைத் தலைவனிடம் வற்புறுத்துபவர்கள் எனக் களவைக் கற்பாக்கும் முயற்சிகள் அனைத்தும் பெண்களை மையப்படுத்தியனவாக உள்ளன. களவு வாழ்வு இரு திறப்பட்டது. களவு வெளிப்படா முன்னர் அதையே தொடரும் நிலையில் ஊரார் வாய்ப்பட்டு அம்பல், அலர் என்பன வெளிப்படுவதற்கு முந்தைய நிலை ஒன்று, களவு வெளிப்பட்ட பிந்தை நிலை மற்றொன்று முதல்நிலையில் தலைவன் தலைவி, பாங்கன், தோழி ஆகிய நால்வர்க்கும் இடைப்பட்டதான செயற்பாடுகளை உடையதாகப்பிறர் அறியாத

நிகழ்வாக உள்ளது. இரண்டாவது நிலையானது களவு கற்பாக மாறும் சூழலாகும். களவைப் பெற்றோரும் ஊராரும் அறிந்த பின்னர் ஏற்படும் சிக்கல்களை எதிர்கொள்ளும் நிலையைஇந்நிலை விளக்குகின்றது, இற்செறிப்பு, வெறியாட்டு, அறத்தொடு நிற்றல், வேற்றுவரைவு எனும் பல்வேறு நிழ்வுகள் களவு வெளிப்பட்ட பின் நிகழ்கின்றன. ஆகவே காதல் வாழ்வு போராட்டமிக்கதாகவும் அம்முயற்சியில் வெற்றியடைய இளம் சமுதாயத்தினரின் போக்குப் போரட்டம் மிக்கதாகவும் உள்ளது.

**உடன்போக்கும் சமூக மதிப்பும்**

சங்க இலக்கியங்கள் சங்கச் சமூகத்தின் எல்லா வகையான உயர்வு தாழ்வுகளைக் காட்டுகின்றன. இனக்குழுச் சமூகத்தின் வாழ்வியல் எச்சத்தையும் நாகரீக சமூகத்தின் வாழ்வியலையும் பதிவு செய்துள்ளபடைப்பாகும். இவ்விலக்கியங்கள் ஆண்-பெண் வாழ்க்கைமுறையின் நடைமுறை செயல்பாட்டை விளக்கும் இயல்புடையன. இனகுழுச் சமூகத்தால் ஒரு மணமுறையாகக் கருதப்பட்ட உடன்போக்கு எனும் செயற்பாடு நாகரீக வளர்ச்சி நிலையில் மரபுமீறும் செயலாகக் கருதப்பட்டது. ஆகையால் உடன்போக்கு எனும் செயலுக்குப் பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்துத் தடைகளை ஏற்படுத்தினர். பெற்றோர் ஒப்புதலுடன் ஒத்தகுலத்தில் மேற்கொள்ளப்படும் மணமே சமூகத்தில் அங்கீகாரம் உடையதாகக் கருதப்பட்டது. "சங்க இலக்கியங்களில் அறம் பற்றிய பதிவுகளைக் கவனிக்கும் போது, ஒரு காலகட்டத்தில் களவு வாழ்க்கையே சமூக அறமாக இருந்தது என்பதும், அப்போது தாய்வழிச் சமூகமாகத் தமிழ்ச்சமூகம்இருந்தது என்பதும், இது தந்தை வழிச் சமூகத்தில் தடை செய்யப்பட்டு, அறமற்றதாக ஆக்கப்பட்டு, பெற்றோர் ஒப்புதலுடன் கூடிய மணம் அல்லது கற்புமணம் அறமுடையது என்றும் வலியுறுத்தப்பட்டது"[8] என முனைவர் ம.இளங்கோவன் தமிழ்ச்சமூக உருவாக்கமும் அறக்கருத்தாக்கமும் எனும் கட்டுரையில் விளக்கியுள்ளார்.

பழங்காலத்தில் களவு மணமாகக் கருதப்பட்ட உடன் போக்கிற்கு முதல் எதிரியாகத் தாய் இருக்கிறாள். குடும்ப பெருமையையும் சமூக மதிப்பையும் காக்க வேண்டிய பொறுப்பு தாய்க்கு உள்ளது. "தாய்.... காதல் எதிர்ப்பில் பெண்ணுடன் நேராகத் தொடர்பு கொள்கிறாள். தலைவியின் துயரை இனங்காண வெறியாட்டு நடத்துகிறாள். இற்செறித்தல், காவலுக்கு உட்படுத்துதல் ஆகியன தாயால் நடத்தப்படுகின்றன. அவள் கொடுமை முகத்தாலும் நோக்காலும் செயலாலும் வெளிப்படுகின்றது. மேற்செய்திகளின் அடிப்படையில் தாய் தந்தை இருவருமே பாதுகாவலாக இருந்தனர் என்பதைப் புலப்படுத்துகின்றன. அதனால் பெண் அவர்களைப் பாதுகாப்பாளராக ஏற்றதாகவோ, அவர்கள் செயலுக்குக் கீழ்ப்படிந்து நடந்ததாகவோ செய்திகள் இல்லை. பெண் அச்சூழலை எதிர்த்து உடன்போக்கு மேற்கொண்டவளாக காணப்படுகின்றாள்"[9] என பெண்ணின் சுதந்திர போக்கை கே.பி.அழகம்மை சுட்டிகாட்டுகிறார்.

இவ்வாறு தாய் தலைவியின் உடன் போக்கை எதிர்த்தாலும் பிரிந்து சென்ற தன் மகளுக்குச் செல்லும் வழியில் தீங்கு நேராது இருக்க எண்ணுகிறாள். "பெற்றோர் தன் திருமணத்திற்கு இசைவு தராத போழுது, தான் விரும்பிய காதலனுடன் உடன்போக்கில் சென்று இல்லற வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் பண்பு அக்கால இளம் பெண்களிடம் காணப்பட்டதும் அங்ஙனம் சென்ற பெண்ணைப் பழிக்காமல் அவள் சென்ற வழியின் தன்மையை எண்ணியே அவர்தம் தாய்மார்கள் வருந்தியதும் எளிய கணவனை மணந்தாலும் அவ்வாழ்க்கையைச் செம்மையாக மேற்கொண்ட அவர்களின்இயல்பு அத்தாய்மார்களால் பாராட்டப்பட்டது"[10] என்று முனைவர் ப.அனுராதா தாயின் உணர்வு போராட்டத்தை விளக்குகின்றார். சமூகத்தின் உடைமை வளர்ச்சியின் காரணமாகப் பெண்ணின் உரிமையாகக் கருதப்பட்ட களவு, கட்டுப்படுத்தப்பட்ட செயலாக மாறியதை டாக்டர் அ.தட்சிணாமூர்த்தி "ஒத்த குலத்தார் தத்தம் தகுதி நோக்கி உரிய இடத்தில் மணம் பேசி முடிப்பதே அன்றைய நடைமுறை வழக்கம் என்றும் காதல் சிறு வழக்கு என்பதையும் அறியலாம். குலவேறுபாடோ பொருளாதார ஏற்றத்தாழ்வோ பெற்றோர் சம்மதியாமைக்குக் காரணமாகும்"[11] என்று விளக்குகிறார். இத்தகைய மாற்றத்திற்கு முக்கிய காரணம் தந்தைமையச் சமூகத்தின் வளர்ச்சியே அடிப்படையாக அமைகிறது. "சுதந்திரமான உடன்போக்கு மெல்ல மெல்ல கட்டுப்படுத்தப்பட்டு பெற்றோர் தீர்மானிக்கும் திருமண உறவை ஏற்கும் நிலை உருவாக்கப்பெற்றது. உடைமை வளர்ச்சிக்கும் உற்பத்திப் பெருக்கத்திற்கும் உகந்த குடும்ப அமைப்பை நோக்கிய மாற்றத்தை இச்சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன"[12] என பக்தவத்சலபாரதி சங்ககாலக் குடும்பம் எனும் கட்டுரையில் கூறும் கருத்தும் "உடன்போக்கு உள்ளிட்ட சுதந்திரகாதல் அல்லது களவுக்காதல் பிற்காலத் தமிழகத்தில் தடைசெய்யப்பட்டது. ஆண் தலைமைச் சமூக மாற்றமும், வாரிசு உரிமையும் ஒருதார மணமுறையின் ஆதிக்கமும் களவுக்காதலை முற்றிலும் தடை செய்தன"[13] என்ற சிலம்பு நா.செல்வராசு கூறும் கருத்தும் சங்ககாலத்தில் உடன்போக்கு எனும் செயல்பாடு எதிர்ப்புமிக்க செயல்பாடாகக் கொள்ளப்பட்டதை உணரலாம்.

**முடிபாக**

சங்க இலக்கியம் காட்டுகின்ற காதல் முற்றிலும் தலைவி, தோழி, நற்றாய், செவிலி எனப் பெண்களை மையப்படுத்தியதாகவே இருந்துள்ளன. தலைவன் தலைவியின் காதல் செயற்பாட்டில் தடையாகயிருப்பது தலைவியின் தாயே ஆவாள். தாயே காதல் பாதையில் முதல் தடையை உண்டாக்குகிறாள். ஆவள் தலைவியை வீட்டில்

சிறைப்படுத்துவதன் வழியாக அவளுடைய காதலை வலிமையடையச் செய்கிறாள். ஆனால் தலைவி தலைவனுடன் உடன்போக்கு மேற்கொண்ட நிலையில் தாயின் உண்மையான அன்பின் ஆழத்தை அறியலாம். குடும்ப பெருமையைப் பாதுகாப்பதற்காகவே தாய் தன் மகளை நெருக்கமான கண்காணிப்பில் வைத்துக்கொள்ள விரும்புகின்றாள். தலைவியின் காதலுக்குத் தாய் தடைகளை ஏற்படுத்தினாலும் உடன்போக்கு மேற்கொண்ட தலைவியின் செயல் அறநிலப்பட்டதாகவே தாயால் எண்ணப்படுகிறது. காதல் வயப்பட்ட பெண்டிர்க்கான காவல், மிகுதியாக இருந்த போதிலும் உடன்போக்குப் பரவலாக நடைபெற்றுள்ளது. உடன்போக்குத் திருமணங்களுக்கு மிகுந்த ஆதரவும் இருந்துள்ளது. தலைவன் தலைவி எனும்இருவரின் குடும்பம் சார்ந்ததாயரும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளதை உடன்போக்குத் துறைப் பாடல்கள் தெளிவுப்படுத்துகின்றன. பாலைத்திணைப்பாடல்கள், தமிழர் வாழ்வியல் செயல்பாடுகளில் உடன்போக்கு எனும் மணமுறை குறித்த சமூக நடவடிக்கையைத் தெளிவாகக் காட்டுகின்றன.

**அடிக்குறிப்புகள்**


1. சமூக விஞ்ஞானம் (காலாண்டு ஆய்விதழ்) செப்டம்பர் 2010, ப.23.
2. சமூக விஞ்ஞானம் (காலாண்டு ஆய்விதழ்) செப்டம்பர் 2010, ப.24.
3. கு.ப.அழகம்மை, இலக்கியக் தேடல்கள்,ப.70.
4. தமிழண்ணல், சங்கமரபு, ப.189.
5. பெ.மாதையன், சங்க இலக்கியத்தில் குடும்பம், ப.16.
6. நச்சினார்க்கினியர் (உ.ஆ.), தொல்காப்பியம், பொருளதிகாரம் களவியல், ப.151.
7. பெ.மாதையன், சங்க இலக்கியத்தில் குடும்பம், ப.26.
8. உங்கள் நூலகம், மலர் 3, இதழ்.8, டிசம்பர்.2011, ப.3.
9. கே.பி.அழகம்மை, சமூகநோக்கில் சங்கமகளிர், ப.41.
10. ப.அனுராதா, சங்க பேழை, ப.62.
11. அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், பக்.69-70.
12. புதியபனுவல், ஏழட.2.ஏப்ரல் 2010, ப.15.
13. சிலம்பு நா.செல்வராசு, தொல்காப்பியத்தில் மணமுறைகள் சமூக மானுடவியல் ஆய்வு, ப.193.